பிரசார்பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

13 09 2026 SUNDAY 6 30 PM

<u>தலைப்புச் செய்திகள்</u>

1) பிரிக்ஸ் உச்சிமாநாடு, பெரிய அளவில் வெற்றி பெற்றுள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2) சர்வதேச தரத்திற்கு இணையான வசதிகள் சென்னை விமான நிலையத்தில் ஏற்படுத்தப்பட்டு வருவதாக மத்திய அமைச்சர் திரு. ராம்மோகன் நாயுடு கூறியுள்ளார்.

3) பிற மாநிலங்களுடன் ஒப்பிடுகையில், தமிழகத்தில் மின்வெட்டு குறைவாக உள்ளதாக வருவாய்த்துறை அமைச்சர் திரு. கே.ஏ. செங்கோட்டையன் தெரிவித்துள்ளார்.

4) மதுராந்தகம் மற்றும் தாராபுரம் சட்டப்பேரவை தொகுதிகளுக்கான இடைத்தேர்தலில் தனித்துப் போட்டியிடப் போவதாக இடதுசாரி கட்சிகள் அறிவித்துள்ளன.

5) ஆசிய கோப்பை ஜூனியர் ஹாக்கி போட்டியின், ஆடவர் மற்றும் மகளிர் பிரிவில் இந்தியா தங்கப்பதக்கம் வென்றது.

>>>>>><<<<<<

பிரிக்ஸ் உச்சிமாநாடு பெரிய அளவில் வெற்றி பெற்றுள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

புதுதில்லியில் பாரத் மண்டபத்தில் நடைபெற்ற இம்மாநாட்டில் நிறைவுரையாற்றுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

>>>>>><<<<<<

தடுப்பூசி உற்பத்தியில் இந்தியா முன்னணியில் உள்ளதாக பிரதமர் அலுவலக இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் கூறியுள்ளார்.

புதுதில்லியில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், உலக அளவிலான தடுப்பூசி உற்பத்தியில் 60 சதவீதத்தை இந்தியா கொண்டிருப்பதாக குறிப்பிட்டார்.

இந்தியாவில் உற்பத்தி செய்யப்படும் தடுப்பூசிகள் நூற்றுக்கும் மேற்பட்ட நாடுகளுக்கு வழங்கப்பட்டு வருவதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

>>>>>><<<<<<

சர்வதேச தரத்திற்கு இணையான வசதிகள் சென்னை விமான நிலையத்தில் ஏற்படுத்தப்பட்டு வருவதாக சிவில் விமான போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. ராம்மோகன் நாயுடு கூறியுள்ளார்.

சென்னை விமான நிலையத்தில் 22 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள Pick up Plaza-வை காணொலி வாயிலாக திறந்து வைத்து அவர் பேசினார்.

பயணிகள் விமான நிலையத்திற்கு எளிதாக வந்து செல்லும் வகையில் இந்த வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இதன் காரணமாக, போக்குவரத்து நெரிசல் குறையும் என்றும் அமைச்சர் கூறினார்.

>>>>>><<<<<<

தமிழகத்திற்கு முதலீடுகளை ஈர்க்கும் நோக்கில், முதலமைச்சர் திரு. விஜய் லண்டன் பயணம் மேற்கொண்டுள்ளதாக வருவாய்த்துறை அமைச்சர் திரு. கே.ஏ. செங்கோட்டையன் கூறியுள்ளார்.

ஈரோட்டில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், த.வெ.க அரசுக்கு எதிரான நேர்மையான விமர்சனங்களை எதிர்கொள்ளும் திறன் தங்களுக்கு உள்ளதாக தெரிவித்தார்.

அண்டை மாநிலங்களுடன் ஒப்பிடுகையில் தமிழகத்தில் மின்வெட்டு குறைவாக உள்ளது என்றும் திரு. கே.ஏ. செங்கோட்டையன் தெரிவித்தார்.

>>>>>><<<<<<

மக்கள் நலனில் அக்கறையின்றி த.வெ.க. அரசு செயல்பட்டு வருவதாக திமுக குற்றம் சாட்டியுள்ளது. சமூகவலைதளத்தில் இதனை பதிவு செய்துள்ள அக்கட்சி, மாநிலம் முழுவதும் மின்வெட்டு நிலவுவதாக தெரிவித்துள்ளது. தண்ணீர் பற்றாக்குறை, பாலியல் அத்துமீறல்கள், விவசாயிகள் போராட்டம் என எதற்கும் த.வெ.க. அரசு செவிசாய்க்கவில்லை என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. நிலைமை இவ்வாறிருக்க, முதலமைச்சர் திரு. விஜய், மக்களின் வரிப்பணத்தில் லண்டனில் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளதாகவும் திமுக கூறியுள்ளது.

>>>>>><<<<<<

மதுராந்தகம் மற்றும் தாராபுரம் சட்டப்பேரவை தொகுதிகளுக்கான இடைத்தேர்தலில் தனித்துப் போட்டியிடப் போவதாக இடதுசாரி கட்சிகள் அறிவித்துள்ளன. திருச்சியில் செய்தியாளர்களிடம் இதனை தெரிவித்த மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் திரு. சண்முகம், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தாராபுரத்திலும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மதுராந்தகத்திலும் போட்டியிடவுள்ளதாக கூறினார். இந்த இடைத்தேர்தலில் தனித்து போட்டியிடுவதால், த.வெ.க அரசுக்கு எவ்வித பாதிப்பும் இல்லை என்றும் அவர் தெளிவுபடுத்தினார்.

த.வெ.க. அரசுக்கு இடதுசாரி கட்சிகள் வெளியிலிருந்து அளித்து வரும் ஆதரவு தொடரும் என்றும் திரு. சண்முகம் கூறினார். இந்த இரண்டு தொகுதிகளிலும் இடைத்தேர்தலுக்கான வாக்குப்பதிவு அடுத்த மாதம் 6ஆம் தேதி நடைபெறுகிறது. இதற்கிடையே, இந்த இடைத்தேர்தலில் நாம் தமிழர் கட்சியின் சார்பில் மதுராந்தகம் தொகுதியில் திரு. ஜானகிராமனும், தாராபுரம் தொகுதியில் திருமதி. கார்த்திகாவும் போட்டியிடவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

>>>>>><<<<<<

தமிழகத்தின் ஒரு சில பகுதிகளில் அடுத்த 3 தினங்களுக்கு கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையத்தின் தென் மண்டல இயக்குநர் டாக்டர் வி.ஆர். துரை தெரிவித்துள்ளார். எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

>>>>>><<<<<<

மாவட்டச் செய்திகள்

காஞ்சிபுரம் மாவட்டத்தில், அரசு சேவைகளுக்கான சிறப்பு முகாம் வரும் புதன்கிழமை உத்திரமேரூர் வட்டத்தில் நடைபெறும் என்று ஆட்சியர் திருமதி. சினேகா கூறியுள்ளார்.

>>>>>><<<<<<

நீலகிரி மாவட்டம், உதகமண்டலம் நகராட்சியில் குப்பைகளை தரம் பிரித்து வழங்குவோருக்கு பரிசும், பாராட்டு சான்றிதழும் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

>>>>>><<<<<<

திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி அருகே விவசாய கிணற்றில் விழுந்த கன்றுக்குட்டியை தீயணைப்புத்துறையினர் பத்திரமாக மீட்டனர்.

>>>>>><<<<<<

சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் ஆயிரத்து 562 விநாயகர் சிலைகளுக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளதாக காவல்துறை தெரிவித்துள்ளது.

>>>>>><<<<<<

கடலூர் மாவட்டம், ரெட்டிக்குப்பம் கிராமத்தில் உள்ள 50 ஆண்டுகள் பழமைவாய்ந்த பெருமாள் கோவிலின் கும்பாபிஷேகம் இன்று வெகுவிமரிசையாக நடைபெற்றது.

>>>>>><<<<<<

கன்னியாகுமரி மாவட்டம், திற்பரப்பு அருவியில் விடுமுறை நாளான இன்று சுற்றுலாப் பயணிகள் குவிந்தனர்.

>>>>>><<<<<<

நாகர்கோவிலிலிருந்து தாம்பரத்திற்கு நாளை இரவு மணி 10.45-க்கு அதிவிரைவு சிறப்பு ரயில் இயக்கப்படவுள்ளதாக தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது.

>>>>>><<<<<<

விளையாட்டுச் செய்திகள்

ஆசிய கோப்பை ஜூனியர் ஹாக்கி போட்டியின், ஆடவர் மற்றும் மகளிர் பிரிவில் இந்தியா, தங்கப்பதக்கம் வென்றது.

சீனாவில் நடைபெற்ற இப்போட்டியில் இந்தியா ஆடவர் பிரிவு இறுதியாட்டத்தில், 4-1 என்ற கோல்கணக்கில் கொரியாவை வென்று தங்கப்பதக்கத்தை கைப்பற்றியது.

இதன்மூலம் உலக கோப்பை ஜூனியர் ஹாக்கி போட்டியில் பங்கேற்கவும் இந்தியா தகுதி பெற்றுள்ளது.

மகளிர் பிரிவு இறுதியாட்டத்தில் இந்தியா, 1-0 என்ற கோல்கணக்கில் சீனாவை வென்று தங்கப்பதக்கத்தை கைப்பற்றியது.

இப்போட்டியில் தங்கப்பதக்கம் வென்ற மகளிர் அணியில் இடம்பெற்றுள்ளவர்களுக்கு தலா 3 லட்சம் ரூபாய் பரிசுத்தொகையை Hockey India அறிவித்துள்ளது.

>>>>>><<<<<<

ஜப்பான் பாரா பேட்மிண்டன் போட்டியில் இந்தியா ஒரு தங்கம், 3 வெள்ளிப்பதக்கங்களை வென்றது.

ஆடவர் ஒற்றையர் பிரிவுகளில் Pramod Bhagat தங்கப்பதக்கத்தையும், Umesh Vikram Kumar மற்றும் Sukant Kadam வெள்ளிப்பதக்கத்தையும் வென்றனர்.

ஆடவர் இரட்டையர் பிரிவில் Pramod Bhagat - Sukant Kadam இணை வெள்ளிப்பதக்கத்தை கைப்பற்றியது.

>>>>>><<<<<<

வியட்நாம் ஓப்பன் பேட்மிண்டன் போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவில், இந்தியாவின் Isharani Baruah வெள்ளிப்பதக்கம் வென்றார்.

>>>>>><<<<<<

17 வயதுக்குட்பட்டோருக்கான ஆசிய பேட்மிண்டன் சாம்பியன் போட்டியில் இந்தியா ஒரு தங்கம், ஒரு வெள்ளிப்பதக்கம் வென்றது.

இப்போட்டியின் 15 வயதுக்குட்பட்டோருக்கான ஆடவர் இரட்டையர் பிரிவில் Aaditya Negi – Tanmay Verma இணை வெண்கலப்பதக்கத்தை வென்றது.

>>>>>>END<<<<<<